LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## GEOS 4102 பிரதேச அபிவிருத்தியும், திட்டமிடலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. I. அபிவிருத்தி எனும் பதத்தினை வரையறை செய்க.
(05 புள்ளிகள்)

II. பிரதேச அபிவிருத்தி கற்கையின் முக்கியத்துவம் யாது?
(05 புள்ளிகள்)

III. பிரதேச அபிவிருத்தி திட்டமிடல் பிரச்சினைகளை இலங்கையை உதாரணமாகக் கொண்டு பின்வரும் தலைப்புக்களின்கீழ் விளக்குக.
(அ) ஒன்றிணைப்புப் பிரச்சினை
(ஆ) மூலதனப் பிரச்சினை
(இ) அரசியல் தலையீடு
(15 புள்ளிகள்)

02. I. இலங்கையில் 1970 களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திட்டங்களைக் குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

II. இத்திட்டங்கள் பிரதேச வேறுபாடுகளைக் குறைக்க எந்தளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன - ஆராய்க.
(10 புள்ளிகள்)

III. பிரதேச அபிவிருத்தி சார்ந்த நிறுவனக் கட்டமைப்பின் வளர்ச்சியை மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

03. I. மத்திய இடக்கோட்பாடு என்பதால் கருதப்படுவது யாது?
(05 புள்ளிகள்)

II. பிரதேச அபிவிருத்தி திட்டமிடலுக்கு மத்திய இடக்கோட்பாடு எந்தளவுக்கு ஒரு உபாயமாக உள்ளது என்பதை உதாரணங்கள் காட்டி விளக்குக.
(20 புள்ளிகள்)

04. I. திட்டமிடல் என்பதனைச் சுருக்கமாக விளக்குவதுடன் மாவட்ட திட்டமிடல் என்பதனை தேசிய திட்டமிடலிலிருந்து வேறுபடுத்துக.
(10 புள்ளிகள்)

II. திட்டமிடல் மற்றும் நிறைவேற்றல் மட்டச் செய்முறையின் முக்கிய நிலைகளை பொருத்தமானதொரு உதாரணத்துடன் நுணுகி ஆராய்க.
(15 புள்ளிகள்)

05. சரியான தந்திரோபாயங்களைக் கடைப்பிடிப்பதிலேயே பிரதேச அபிவிருத்தி இலக்குகளை அடையலாம். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப்பிரதேச அபிவிருத்திக்குப் பொருத்தமான உமது தந்திரோபாயங்களைத் தந்து நியாயப்படுத்துக.

(25 புள்ளிகள்)

06. இலங்கையைத் தவிர்த்து உமக்கு விருப்பமான நாடு ஒன்றைத் தெரிவுசெய்து அங்கு காணப்படும் பிரதேச அபிவிருத்தி வேறுபாடுகளை விபரிப்பதுடன் அவற்றினைக் குறைக்க எடுத்த முயற்சிகளையும் குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

***